**அழகியற் கலை பல்கலைக்கழகம் - 2019**

---

## 1.1 அபிப்பிராயம்

அழகியற் கலை பல்கலைக்கழகத்தின் 2019 ஆம் ஆண்டு டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அன்றைய திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான காசுப்பாய்ச்சல் கூற்று, நிதிக் கூற்றுகளுக்கு ஏற்புடையதான குறிப்புகள் மற்றும் சாராம்சப்படுத்திய முக்கியமான கணக்கீட்டு கொள்கைகள் என்பவற்றைக் கொண்டமைந்துள்ள 2019 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான நிதிக் கூற்றுகள் 1978 ஆம் ஆண்டு 16 ஆம் இலக்க பல்கலைக்கழகச் சட்டத்தில் 107(5) ஆவது உப பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய, இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரை மற்றும் 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைவாக எனது பணிப்பின் கீழ் கணக்காய்வுச் செய்யப்பட்டது. பாராளுமன்றத்திடம் சமர்ப்பிக்க வேண்டுமென கருதுகின்ற எனது கருத்துக்கள் மற்றும் அவதானிப்புகள் இவ்வறிக்கையில் குறிப்பிடப்படுகின்றது.

பல்கலைக்கழகத்தின் 2019 ஆம் ஆண்டு டிசெம்பர் 31 ஆந் திகதியில் நிதிசார் நிலைமையினையும் அன்றைய திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான அதன் நிதி செயலாற்றினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு தரநியமம்படி (இ.க.த.நி) பிரகாரம் என்னால் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. இந்த கணக்காய்வு தரநியமம்படி எனது பொறுப்பு, இவ்வறிக்கையில் நிதிக்கூற்றுகளின் கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை வழங்கும் பொருட்டு என்னால் பெற்றுக்கொண்டுள்ள கணக்காய்வு சாட்சிகள் போதுமானதும் பொருத்தமானதெனவும் நம்புகின்றேன்.

## 1.3. நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, பல்கலைக்கழகம் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது பல்கலைக்கழகத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பல்கலைக்கழகத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் பல்கலைக்கழகத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக் கூடியவாறு பல்கலைக்கழகம் அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4. நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி பல்கலைக்கழகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு அதிகாரசபைக்கு உள்ள ஆற்றல் தொடர்பில்

குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் பல்கலைக்கழகத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயன்ற வரை தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரிசோதனை செய்வதற்கு கணக்காய்வு விடயவெல்லையும் விரிவாக்கப்பட்டுள்ளது.

- தகவல் சமர்ப்பித்தல் தொடர்பானவிடத்து பல்கலைக்கழகத்தின் கடமைகள் தொடர்ச்சியாக மதிப்பீட்டுக்கு உட்படும் வகையில் அதன் ஒழுங்கமைதல், முறைமைகள், திட்டங்கள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய கடித ஆவணங்கள் முறையாகவும் போதுமான அளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும், குறித்த முறைமைகள், திட்டங்கள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய கடித ஆவணங்கள் பயனுள்ளவாறு பேணிச் செல்லப்படுகின்றதா எனவும்,

- ஏதேனும் எழுத்தினாலான சட்டத்திற்கு அல்லது அதிகார சபையின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட ஏதேனும் பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுகி நிறுவனம் செயற்பட்டுள்ளது எனவும்.

- தமது தத்துவங்கள், பணிகள் மற்றும் கடமைகளுக்கு இணங்கியொழுகி செயலாற்றப்பட்டுள்ளது எனவும்,

- வளங்கள், காலவரையறைகளினுள்ளும் ஏற்புடையற்பாலனவான சட்டங்களுக்கு இணங்கியொழுகவும் சிக்கனமாகவும், வினைத்திறனாகவும், பயனுறுதியாகவும் பெறப்பட்டுப் பயன்படுத்தப்பட்டுள்ளது எனவும்,

## 1.5 நிதிக் கூற்றுகள்

----------------------

### 1.5.1 நிதிக் கூற்றுகள் தயாரித்தல் தொடர்பான உள்ளக கட்டுப்பாடு

---------------------------------------------------------------------------------

கொடுக்கல்வாங்கல் முகாமைத்துவத்தில் பொதுவான மற்றும் உறுதியான அதிகாரத்துடன் செயற்படல், உரியதான அறிக்கையிடல்களை நியமங்களுக்கு ஒழுங்கமைவாக தயாரிப்பதற்கு தேவையானவாறு கொடுக்கல்வாங்கல்களை பதிவு செய்தல், சொத்துக்களுக்கான கணக்கீட்டு நெறிமுறை பேணிச் செல்லுதல், முகாமைத்துவத்தின் பொதுவான மற்றும் உரிய அதிகாரத்துவத்துடன் மட்டும் சொத்துக்களை அணுகுதல், குறிப்பு வைக்கப்பட்ட சொத்துக்களுக்கான கணக்கீட்டு நெறிமுறை தற்போதுள்ள சொத்துக்களுடன் நியாயமான காலப் பகுதிக்குள் ஒப்பிடுதல், வேறுபாடுகள் இருப்பின் அவை தொடர்பாக உரியவாறு நடவடிக்கை எடுத்தல் என்பவற்றுக்கு நியாயமான உறுதியினை பெற்றுக்கொள்வதற்கு போதியளவிலான ‘‘சிறப்பாக

திட்டமிடப்பட்ட'' உள்ளக கணக்கீட்டு கட்டுப்பாட்டு முறைமையை நிறுவனத்தால் பேணிச்செல்லுதல் அத்தியாவசியமாகும்.

## 1.6 கிடைக்கப்பெறுவனவைகளும் செலுத்தப்பட வேண்டிய கணக்குகளும்

### 1.6.1 கிடைக்கப்பெறுவனவைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
|---|---|---|
| 2019 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதியில் நிதிக் கூற்றுகளில் காண்பிக்கப்படும் ஊழியர் கடன் மற்றும் முற்பண மீதிகள் உள்ளடக்கிய 07 அலுவலர்களிடமிருந்து அறவிடப்படாத மொத்தம் ரூபா.980,433 ஆன இடர், வாகன, ஊழியர் கடன் மீதி அறவிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை. | எதிர்காலத்தில் சீராக்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் | துரிதமாக அறவிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். |

### 1.6.2 செலுத்தப்பட வேண்டிய பணம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
|---|---|---|
| நிதிக் கூற்றுகளில் ஏனைய செலத்தப்பட வேண்டிய மீதிகளின் கீழ் காட்டப்பட்டுள்ள 2017 ஆம் ஆண்டுக்கு ஏற்புடையதான மொத்தம் ரூபா.156,385 ஆன தீர்க்கப்படாத 90 கொடுப்பனவு மீதிகள் மீளாய்விற்கான ஆண்டு இறுதியில் சீராக்குவதற்கு அல்லது அறவிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளாது நடைமுறை பொறுப்புளின்கீழ் காட்டப்பட்டிருந்தது. | எதிர்வருங் காலங்களில் சீராக்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | விரைவாக சீராக்குதல் வேண்டும் |

### 1.6.3 ற்பணம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
|---|---|---|
| நிதிக் கூற்றுகளில் உள்ளடக்கியுள்ள மொத்தம் ரூபா.5,319,506 ஆன மூலதன முற்பணங்கள் 2 நீண்ட காலம் தொடக்கம் சீராக்கப்படாதிருந்தது. | எதிர்வருங் காலங்களில் சீராக்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | விரைவாக சீராக்குதல் வேண்டும் |

**1.7 சட்டங்கள்,விதிகள்,ஒழுங்கவிதிகள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுக்கு ஒழுங்கமையாமை**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| சட்டங்கள்,விதிகள், ஒழுங்குவிதிகள் என்பவற்றுக்கான தொடர் | ஒழுங்கமையாமை | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ)இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதி ஒழுங்கு விதிக்கோவை | | | |
| (i) நிதி ஒழுங்கு விதி 571 | பல்வேறு அலுவல்களின் பொருட்டு 2011 ஆம் ஆண்டு தொடக்கம் 2017 ஆம் அண்டு வரை 73 சந்தர்ப்பங்களில் பல்கலைக்கழகத்தில் வைப்புச் செய்யப்பட்ட மொத்தம் ரூபா.45,898,995 ஆன வைப்புகளும் பிடிப் பணமும் மீளாய்விற்கான ஆண்டு இறுதியிலும் ஒப்பந்தக்காரரிடம் செலுத்துவதற்கு அல்லது வருமானத்தில் வைப்பதற்கு நடவடிக்கை மெற்கொள்ளப்படவில்லை. | எதிர்வருங் காலங்களில் சீராக்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | விரைவாக சீராக்குதல் வேண்டும் |
| (ii)நிதி ஒழுங்கு விதி 770(2) | 2019 ஆம் அண்டில் மேற்கொள்ளப்பட்ட வருடாந்த பொருட் மீளாய்வு பௌதீக ஆய்வு அறிக்கைபடி மொத்தம் ரூபா.1,444,532 ஆன 20 மீண்டுவரும் உருப்படிகள் 2016 ஆம் ஆண்டுக்கு முன்னர் இருந்து பயன்படுத்தாது களஞ்சியத்தில் உள்ளமை அவதானிக்கப்பட்டது. | குழுவின் பரிந்துரைபடி நடவடிக்கை மெற்கொள்ளப்படுகிறது. | குழுவின் பரிந்துரைபடி நடவடிக்கை மெற்கொள்ளுதல் வேண்டும். |
| (ஆ)பல்கலைக்கழ மானியங்கள் ஆணைக்குழு தாபன விதிக்ோவை | | | |
| (i) xxii அத்தியாயத்தின் 2.2.4 ஆவது பிரிவு | முறையின்றி தனிப்பட்ட இலாபம் பெற்றும் கொள்ளும் நோக்கில் செயற்படுதல், தமது உறவினர்களிடமிருந்து இலாபம் கருதி உத்தியோக- | ஆரம்ப விசாரணை நடாத்தப்பட்டுள்ளது. | தமது கடமைகளில் கிடைக்கப்பெற்ற அதிகாரத்தை முறையற்ற வகையில் |

| | | | |
|---|---|---|---|
| | பூர்வ பதவி அந்தஸ்த்தினை பயன்படுத்தல் மற்றும் தமது கடமைகள் அல்லது தமது அதிகாரம் பயன்படுத்த முடியாவிடினும், பல்கலைக்கழகத்தின் கல்வி நடவடிக்கைகளின் பொருட்டு பதிவு செய்துள்ள இரண்டு மாணவர்களின் உறவினர்கள் பல்கலைக்கழகத்தின் சங்கீத பீடத்தில் கல்விசார் பணியாற்தொகுதியில் சேவையில் ஈடபட்டு, அவர்களின் பரீட்சை நடவடிக்-கைகள் மற்றும் செய்முறை பரீட்சை நடவடிக்கைகளில் முனைப்பாக பங்களித்துள்-ளதாக கணக்காய்வின்போது அவதானிக்க்பபட்டது. | | பயன்கொள்ளுவதற்கு இடமளித்தலாகாது. |
| (ii) III அத்தியாயம் 26.13 பிரிவு | பல்கலைக்கழகத்தால் பேணிச் செல்கின்ற வரவு இடாப்பில் வெளியக விரிவுரையாள-ர்களால் வருகை சான்றுப்ப-டுத்தப்பட்டு, தமது பெயருடன், பாடம் மற்றும் போதனை மணித்தியாலங்கள் ஆகிய தேவையான விபரங்களை அங்கு குறிப்பிட வேண்டு-மாயினும், மேற்கத்தேய கல்வி பிரிவினால் பெணிச் செல்கின்ற பதிவேடு அவ்வாறு பேணப்படவில்லை. அதே-போன்று அங்கு வைக்கப்ப-ட்டுள்ள ஒப்பங்களை வெட்டப்பட்டு உருக்குலைத்துல்ல சந்தர்ப்பங்கள் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது. | முறையான ஒழுக்காற்று விசாரணை நடாத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. | பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும். |
| (இ)1997 நவம்பர் 21 திகதிய 721 ஆம் இலக்க பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு சுற்றுநிருபம் | நடனம் மற்றும் நாடக கலை பீடத்தின் பயிலுநர் விரிவுரையாளரின் தகுதிகூர் காலம் ஓராண்டுக்கு மட்டுப்படுத்தி சேவையில் நிரந்தரமாக்கப்பட்டுள்ளது. | மேலதிகமாக செலுத்-தியுள்ள சம்பளம் அறவிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | சுற்றுநிருபங்களுக்கு ஒழுங்கமைந்து நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். |

**2. நிதிசார் மீளாய்வு**

**2.1 நிதிசார் விளைபயன்**

மீளாய்விற்கான ஆண்டில் தொழில்பாட்டு விளைபயன் ரூபா.106,865,169 ஆன பற்றாக்குறை காணப்பட்டதுடன், அதற்கு நேரொத்ததாக கடந்த ஆண்டின் பற்றாக்குறை ரூபா. 34,126,036 ஆகும். அதன்படி நிதிசார் விளைபயனில் ரூபா.72,739,133 ஆன வீழ்ச்சி அவதானிக்கப்பட்டது. இந்த வீழ்ச்சியடைதலுக்கு மீண்டுவரும் மூலதன அளிப்பு அதிகரித்தலுக்கு இணையாக ஆளுக்குரிய வேதனாதிகள் அதிகரித்தல் மற்றும் பணிக்கொடை ஒதுக்கீடு அதிகரித்தல் பிரதான காரணங்களாகியுள்ளன.

**3. தொழில்பாட்டு மீளாய்வு**

**3.1 முகாமைத்துவ வினைத்திறனின்மை**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2016 ஆண்டில் நாடகம், கூட்டு நாடகம் மற்றும் நவீன நடன கல்விசார் பிரிவில் காணப்பட்ட பாடங்களுக்கு இணையாக கணினி பயன்பாடு தொடர்பான பாடத்திற்காக செய்முறை பரீட்சையில் பங்குபற்றாத மாணவர் ஒருவருக்கு பரீட்சை சபையால் பங்குபற்றியதாக குறிப்பிடப்பட்டு, புள்ளிகள் வழங்குதல் தொடர்பான பரீட்சை முறைகேடு நிகழ்ந்திருந்ததுடன், 2019 ஆம் ஆண்டில் அவரை பயிலுநர் விரிவுரையாளராக இந்த பீடத்திலயே ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டிருந்தது. | ஆரம்ப விசாரணை நடாத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. | பரீட்சை முறைடேுகள் தொடர்பாக முறையான விசாரணை நடாத்தி தேவையான நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். |
| (ஆ)பல்கலைக்கழகத்தின் பணியாற்தொகுதியினரால் வெளிநாட்டு புலமைப் பரிசீல்களின் பொருட்டு செல்கையில் மேற்கொண்டிருந்த உன்படிக்கைகளை மீறியிருந்த 2 அலுவலர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா. 5,663,792 ஆன முறி தொகை 4 ஆண்டுகள் தொடக்கம் 8 ஆண்டுகள் | அறவிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்வதாக குறிப்பிடப்பட்டுள்ளது. | துரிதமாக அறவிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| வரை அறவிடுவதற்கு நடவடிக்கை மேற்கொண்டிருக்கவில்லை. | | |
| (இ) பெறுமதி ரூபா.1,022,650,000 ஆன 03 காணிகளை மீளாய்விற்கான ஆண்டில் திசெம்பர் 31 வரை சட்டரீதியாக சுவீகரித்துக்-கொள்வதற்கு முகாமை-த்துவம் தவறியிருந்தது. | எதிர்வருங் காலத்தில் கணக்கு கூற்றுகளில் வெளிப்படுத்துவதாக குறிப்பிடப்பட்டுள்ளது. | துரிதமாக காணிகளை சுவீகரித்துக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |

## 3.2 தொழில்பாட்டு வினைத்திறனின்மை

-----------------------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
|---|---|---|
| (அ)(i)பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்-குழுவால் வெளியிடப்-பட்டுள்ள Quality Assurance Frame Work இல் பரிந்துரை செய்துள்ள ஆகக்குறைந்த மணித்தியாலங்களை ஆசிரியர்களின் பொருட்டு ஒதுக்க வேண்டுமாயினும், 2016/2017 கல்வி ஆண்டுக்காக 796 மணித்தி-யாலங்கள் குறைவாக ஒதுக்கப்பட்டிருந்ததுடன், பல்கலைக்கழக ஆசிரியர்க-ளிடம் ஒதுக்கப்பட்டிருந்த போதனைக்கான மணித்தியாலங்களில் 2,859.5 மணித்தியாளங்கள் போதனகளை நடாத்தப்படவில்லை. | பல்கலைக்கழக ஆசிரியர்களுக்கு Quality Assurance Frame Work இன்படி போதனை-களுக்கான மணித்தியால-ங்கள் ஒதுக்கீடு செய்தல் கட்டாயப்படுத்தியுள்ள-துடன், ஆசிரியர்கள் உரிய மணித்தியால-ங்களின் பொருட்டு போதனை நடாத்தும்படி ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | பாடவிதானத்தின்படி கற்பிப்பதற்கு உரியதாகவுள்ள முழுமையான போதனைகள் மற்றும் செய்முறை மணித்தியாலங்கள் அளவினை கற்கை பணியாற்தொகுதியி-னரிடத்தில் பிரித்து வழங்குதல் வேண்டும். பல்கலைக்கழக ஆசிரியர்கள் தமது போதனை மணித்தியாலங்களை கட்டாயமாக பயன்படுத்தல் வேண்டும். |
| (ii) பரீட்சை பிரிவில் நடைமுறை விதிக் கோவையில் (By Law) எழுத்திலான/செய்முறை பரீட்சை நடாத்தல் தொடர்பாக 20 ஆம் இலக்க துணைச் சட்டத்தில் 6.1 உறுப்புரையில் உள்ள விடயங்கள்படி உரிய திகதியில், பரீட்சை முடிவில் பிரதான பரிசோத-கரால் இறுதி புள்ளி | ஆரம்ப புலனாய்வு நடாத்தப்பட்டுள்ளது. | தாமதமின்றி புள்ளிகளின் அட்டவணை பரீட்சை பிரிவிடம் கையளிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| அட்டவணை தயாரிக்க வேண்டுமாயினும், நாடகம், கூட்டு நாடகம் மற்றும் நவீன நடனக் கல்வி பிரிவில் 2016/2017 கல்வியாண்டில் செய்முறை பரீட்சைகளுக்கு ஏற்புடை-யதாக பெறுபேறு அட்டவணை பரீட்சை பிரிவிடம் கையளிக-கும்போது 01 ஆந் திகதி தொடக்கம் 367 நாட்கள் வரை தாமதமாகிய 16 சந்தர்ப்பங்கள் காணப்பட்டன. | | |
| (iii) நாடகம், கூட்டு நாடகம் மற்றும் நவீன நடன கல்விப் பிரிவில் 2016/2017 கற்கை ஆண்டுக்கு உரிய 03 பாடங்களுக்கு ஏற்புடையதாக கற்கை ஆண்டு 2019 யூன் 18 ஆந் திகதி முடிவடைந்த பின்னர் 127 நாட்கள் தாமத-மடைந்து செய்முறை பரீட்சை நடாத்தியிருந்தமை அவதானிக்கப்பட்டது. | ஆரம்ப புவனாய்வு நடாத்தப்பட்டுள்ளது. | தாமதமின்றி புள்ளிகளின் அட்டவணை பரீட்சை பிரிவிடம் கையளிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். |

## 3.3 நிதியங்களின் குறை பயன்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
|---|---|---|
| அலுவலர்களின் வெளியக பாடச் செயற்பாடுகளை மேம்படுத்துவதற்காக (Encourage Extra Curricular Activities) 2017 ஆம் ஆண்டில் கிடைக்கப்பெற்றிருந்த ரூபா.403,500ஐ மீளாய்விற்கான ஆண்டு இறுதி வரை குறை பயன்பாடாக காணப்பட்டது. | அடிக்கடி துணைவேந்தர்கள் மாற்றமடைவதால் உடற்பயிற்சி நிலையம் ஆரம்பிப்பதற்கு தாமதமடைந்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | உரிய பணிகளை நிறைவேற்றுவதற்காக நிதி செலவிடுதல் வேண்டும். |

## 3.4 மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
| --- | --- | --- |
| மீளாய்விற்கான ஆண்டில் திசெம்பர் 31 ஆந் திகதியில் அங்கீகரிக்கப்பட்ட பணியாற்றொகுதி 590 ஆவதுடன், உண்மையான பணியாற்றொகதி 465 ஆவதால் வெற்றிடங்கள் 125 ஆகும். கல்விசார் பணியாற்றொகுதியில் 90 வெற்றிடங்கள் நிலவியதன் காரணமாக மீளாய்விற்கான ஆண்டில் வெளியக விரிவுரையாளர்களின் கொடுப்பனவாக ரூபா. 44,059,344 செலுத்தப்பட்டிருந்தது. | கல்விசாரா பிரிவுகளின் பணிபகிஷ்கரிப்பு, தேர்தல்கள், கட்டுப்பாட்டுச் சபைகளை கலைத்தல், உயர் கல்வி அமைச்சினால் எல்லா ஆட்சேர்ப்புகளை இடைநிறுத்தல் போன்ற விடயங்களின்மீது ஆட்சேர்ப்புகள் தாமதமடைந்துள்ளன. | துரிதமாக வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

# 4 கணக்கீட்டு நெறிமுறைகள் மற்றும் நல்லாட்சி

## 4.1 வருடாந்த செயற்றிட்டம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
| --- | --- | --- |
| மீளாய்விற்கான ஆண்டின் செயற்றிட்டம்படி 08 இலக்குகளுக்கு ஏற்புடையதாக 153 செயற்பாடுகளை உள்ளடக்கியிருப்பினும், மீளாய்விற்கான ஆண்டில் திசெம்பர் 31 ஆந் திகதியில் செயற்பாடுகளில் 54% ஐ முடிவுறுத்தப்படவில்லை. | இலக்குகளை பூர்த்தி செய்து கொள்கையில் பல்வேறு சவால்களை எதிர்நோக்க வேண்டி ஏற்பட்டது. | செயற்றிட்டம்படி இலக்குகளை பூர்த்தி செய்து கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 4.2 வரவு செலவு கட்டுப்பாடு

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ)மீண்டுவரும் இரண்டு உருபடிகளில் மொத்த ஒதுக்கீடு ரூபா.750,000 தொகை மொத்தமாக பயன்படுத்தியிருக்க-வில்லை. | பாஸ்கு தாக்குதல் மற்றும் கல்விசாரா ஊழியர்களின் பணிபகிஷ்கரிப்பு காரணமாக திட்டமிடப்பட்டவாறு செலவுகளை மேற்கொள்ளுதல் வரையறுக்கப்பட்டுள்ளது. | வரவு செலவு ஏற்றத்தாழ்வுகள் இயன்றவரை குறைத்துக்-கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டு-மென்பதுடன், |

| | | |
|---|---|---|
| | | ஒதுக்கீடுகளை பயனுள்ளவாறு பயன்படுத்தல் வேண்டும். |
| (ஆ)பல்கலைக்கழகத்தின் வரவு செலவு அட்ட-வணை செலவினத்துடன், உண்யைமான செல-வினம் ஒப்பிடுகையில் மூலதன செலவில் 07 உருப்படிகள் மற்றும் மீண்டுவரும் செலவு 06 இல் வரவு செலவு அட்டவணை செலவினம் மற்றும் உண்மையான செலவினம் என்பவற்று-க்கிடையில் 25% தொடக்கம் 95% இடையிலான ஏற்றத்தாழ்-வுகள் அவதானிக்கப்பட்-டதால், வரவு செலவு அட்டவணையை பயனுள்ள முகாமைத்துவ காரணியாக பயன்படுத்-தவில்லை என்பது கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்டது. | பாஸ்கு தாக்குதல் மற்றும் ஒதுக்கீடுகளை விடுவிக்காமை போன்ற காணரங்களின்மீது செலவினத்தின் பெறுமதி குறைந்துள்ளதுடன், குறித்த பிரச்சினைகளுடன்கூடிய நிலைமைகள் காரணமாக முதன்மை வழங்க வேண்டியவைகளை மாற்றிய காரணத்தால் சில செலவினங்கள் ஒதுக்கீடுகளை விஞ்சியுள்ளது. | வரவு செலவு ஏற்றத்தாழ்வுகளை இயன்றவரை குறைத்துக்-கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டு-மென்பதுடன், ஒதுக்கீடுகளை பயனுள்ளவாறு உபயோகித்தல் வேண்டும். |